28th September 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) and (இ) In 1959–60, 204,963 bicycles were manufactured in the following factories in Madras State—

T.I. Cycles of India, Limited, Madras.

Rapid Industries, Madras.

The Varun Industrial Corporation, Madras.

(உ) During the year under reference 280 bicycles were exported to foreign countries and 2,356 to other States in India.

SRI V. K. KOTHANDARAMAN : நமது ராஜ்யத்தில் உற்பத்தி செய்யக்கூடிய சைக்கிள்களுக்கு வெளிநாடுகளில் மிக அதிகப் படியான கிராக்கி இருக்கிறதென்பது உண்மையா ? அப்படியானுல், மேலும் அதிகப்படியாக உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப் படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சைக்கிள் ஓரளவு இப்பொழுது ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதிகமாக ஏற்றுமதி செய்யலாம். ஆனுல், நம்முடைய நாட்டின் தேவையும் அதிகப்பட்டுக் கொண்டு வருகிறது. உற்பத்தியும் பெருக்கப்பட்டுத்தான் வருகிறது.

Irrigation (Pattukottai and Arantangi taluks)

* 1890Q.—SRI R. SRINIVASA IYER (on behalf of SRI A. R. MARI MUTHU) : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை, அறந்தாங்கி தாலுாக்காக்களிலுள்ள காட்டாறு களில் எங்கெங்கு எவ்வளவு செலவில் அணைக்கட்டுகள் கட்டி பாசனவசதி யளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது ?

(இ) இதில் எந்தெந்த அணைகள் கட்டி இதுவரை முடிக்கப்பட் டுள்ளன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) and (*b*) A statement [a] is placed on the table of the House.

SRI R. SRINIVASA IYER : கொடுக்கப்பட்டிருக்கிற ஜாப்தாவில் 21 அணைக்கட்டுகள் குறிப்பிடப்பட்டும், அதிலே ஒன்றுகூட இன்னும் முடி வடையவில்லே. 14 அணைக்கட்டுகளுக்குத் திட்டம் போட்டு, அவை "அண்டர் இன்வெஸ்டிகேஷன்" என்ற நிலேயில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சில அணைக்கட்டுகளின் வேலே ஆரம்பிக்கப்பட்டிருந்தும் ரொம்ப நாளாக வேலே "ஸ்லோ" ஆக நடந்துகொண்டு வருகிறதே, அதற்கு என்ன காரணம் ? இன்வெஸ்டிகேஷனில் இருக்கிற திட்டங்களேப் பொறுத்தவரை யில், "கலெக்டரிடமிருந்தும், ரெவின்யூ போர்டினிடமிருந்தும் food வால்யூ, ரெவின்யூ வால்யூ சம்பந்தமாக ரிப்போர்ட், அனேக ரிமைண்டர்கள் எழுதி யும்கூட வராததால், அவை பிரதம இன்ஜினீயரிடத்தில் "பெண்டிங்" ஆக இருக்கின்றன. ரெவின்யூ இலாகாவினர் சீக்கிரத்திலே ரிப்போர்ட் அனுப்பி வைக்கும்படியாக ஒரு தனி உத்தரவாவது பிறப்பித்து, இந்தத் திட்டங்கள் சீக்கிரம் "சாங்ஷன்" ஆவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதிலே குறிப் பிட்டிருக்கிற பல திட்டங்கள் முடியும் தருவாயில் இருக்கின்றன. இதெல்லாம் தீரப் பரிசீலனே செய்யப்படவேண்டியிருக்கிறது. வேறு யாரும் ஆட்சேபிப்பதற்கு இடமில்லாமல் செய்யவேண்டும். அதனுல்தான் தாமதம் ஆகிறது. இன்னும் இதிலே குறிப்பிடப்படாத மற்ற திட்டங்கள் பற்றியும் இப்பொழுது பரிசீலனே வேகமாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. ஆகவே, இதிலே தவிர்க்கக்கூடிய தாமதம் ஒன்றும் இல்லே என்று தெரி வித்துக்கொள்கிறேன்.

---

[a] Printed as Appendix IX on pages 311–312 infra.